OS 40/2019
வா.சா.1 கேசவன் த/பெ குமார்
நாள் 05.08.2025

**<u>2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. பாரதியார் தெருவில் உள்ள 1A வீட்டை கௌரியின் வாரிசுகளுக்கு ஒதுக்கினார் என்றால் தெரியாது. மீதி உள்ள சொத்துகளை பிரதிவாதிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு மேற்படி விவரம் தெரியும் என்றாலும் அதனால் தான் எனது அப்பா சாட்சி சொல்ல வரவில்லை என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் நன்றாக இருக்கிறார் அவரை சாட்சியாக விசாரிக்க இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக பாகம் செய்து கொண்ட பிறகு நான் எனது பெயருக்கு பாரதியார் தெரு 1A வீட்டை மாற்றம் செய்து கொண்டேன் என்றால் இல்லை. குடும்ப ஏற்பாடு விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் அதனால் தான் பிரதிவாதிகள் பாகம் செய்த பிறகு எனது பெயரில் பட்டா மாற்றிவிட்டு வழக்கிற்காக தற்போது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.8 முதல் 11 வரை உள்ள மின் கட்டண அட்டையில் உள்ள பெயர் விவரங்கள் இந்த வழக்கிற்காக மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் கௌரி 05.11.1991ல் இறந்துள்ளார் என்றால் சரிதான். எனது தாயாரின் அசல் இறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நகல் தாக்கல் செய்திருக்கிறேன். எனது தகப்பனார் ராணி என்பவரை இரண்டாம் திருமணம் செய்தார் என்றால் சரிதான். நானும் என் அண்ணனும் அவருடன் தான் இருந்தோம் என்றால் சரிதான். எனது தாயார் உயிருடன் இருக்கும் போதே எனது தகப்பனார் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது தாயாருக்கும் எனது தகப்பனாருக்கும் விவாகரத்து ஆகிவிட்டதா என்றால் எனது தகப்பனாருக்கு தான் தெரியும். குடும்ப ஏற்பாட்டின் படி எங்களுக்கு ஒதுக்கிய சொத்தை தவிர மீதி இருந்ததை பிரதிவாதிகளுக்கு ஒதுக்கினார்கள் என்றாலும் வம்பிக்கிற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.